REGISTERED No. M. 1011.

உ

ஸ்ரீ வாணி சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆடு அக்டோபர் மீ	இதழ் ௧௦.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ	1	வெளிநாட்டுக்கு ரூ	2
வெளியூரார்க்கு ரூ	1¼	தனிச் சஞ்சிகை அணா	2

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

உள்ளுறை.

பக்கம்.

திருவள்ளுவர் திருக்குறள்:— பத்திராதிபர் 189
தமிழ் மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன். 193
கண்மணி கமலா :— ஸ்ரீ தம்பி - புருஷோத்தமப்பிள்ளை. ... 197
மது:— ஸ்ரீ மு. வேங்கடசாமிநாட்டார், S. P. G. காலேஜ் தமிழ்ப்பண்டிதர், திரிசிரபுரம். 201
முத்கபுரி இரகசியம்:— ஸ்ரீ S. V. G. பாலன். 204
சிலோன் குஷ்டரோகிகளின் ஒரு வேண்டுகோள்:— நோயாளிகள். 206
சுவிவேக தருப்பணம்:— குருபாத சேகரன். 207
பிரிவிடையாற்றுப் பேதாறு கலும்ச்சி:— ஸ்ரீ ஐ. ஏகாம்பர ஐயர், தமிழ்ப்பண்டிதர், சீகாழி. 210

தொழில் பத்திரிகை.

நமது தேசாபிமானிகளுக்கும், பத்திராபிமானிகளுக்கும், தமிழபிமானிகளுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்:—

நாம் முன் விஸ்வகர்ம குலோபகாரி என்ற பெயருடன் நடத்தி வந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையைச் சென்ற ஏப்ரல் மாதமுதல் "தொழில்" என்னும் புதிய பெயரால் நடத்திவருகிறோம்.

இதற்குத் தாங்கள் சந்தாதாரர்களாகச் சேருவதுடன் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் தெரிவித்து அவர்களையும் சந்தாதாரர்களாகச் சேரும்படி செய்ய வேண்டுகிறேன்.

இதற்கு வருஷ சந்தா ரூபா மூன்று.

முன்பணம் அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. சென்ற மூன்றுவருஷத்திய "விஸ்வகர்ம குலோபகாரி" பத்திரிகை ஒரே புத்தகமாக பயிண்டுசெய்துள்ளது. விலை ரூபா 6-0-0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கோ - கன்னியப்ப ஆச்சாரி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ அக்டோபர் மீ	இதழ் ௧௦.

திருவள்ளுவர் திருக்குறள்.

௨-ம் அதிகாரம்.

வான் சிறப்பு.

அஃதாவது கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்பைக் கூறுதலாம்.

உலகத்திற்குத் துணைக்காரணமாகிய மழையினது சிறப்பை எவராலெடுத்துரைக்க முடியும் ! 1 'மழையானது நடுவே நீங்காது நிற்க உயிர்கள் நிலைபெற்று வருதலால், அம்மழை உயிர்களுக்கு அமிழ்தமென்று உணருந்தன்மையையுடையது.' மழையுண்மையினாலே உயிர்கள் எப்போதும் உடம்போடு காணப்பட்டுவருகின்றன. இல்லையேல் ஒருயிரையும் காணமுடியாது. ஆதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்ற மழையை, தன்னையுண்டாரைச் சாவாதுநிலைபெறுத்துகின்றஅமிழ்தம்எனற்குஐயப்பாடுண்டோ?

1.வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

2.'உண்பவர்க்கு நல்ல உணவுகளையுண்டாக்கி, அவற்றை உண்கின்றவர்கட்குத் தானும் உணவாய் நிற்பதும் மழையேயாகும்.' மனிதர்களும் மற்றையுயிர்களும் மழையின்றேல் எங்ஙனம் உயிர்வாழ முடியும்? உணவுப் பொருள்களும் தண்ணீரும் எங்கிருந்து கிடைக்கும்? உயிர்களுக்கு உணவுப் பொருள்களையுண்டாக்குவதுமன்றி, தானும் தண்ணீராயுண்ணப்படுவதும் அம்மழையேயன்றோ! இவ்வாறு மழையானது உயிர்களது பசியையும் நீர் வேட்கையையும் நீக்குதலினாலே அவ்வுயிர்கள் நிலைபெற்றுவருகின்றன.

3.'மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்குமானால், கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் பசியானது நிலைபெற்று உயிர்களை வருத்தும்.' நெடிய கடலிருந்தும் யாது பயன்? மழை பெய்யாதாயின் உணவுப் பொருள்கள் உண்டாதலில்லை. அவை உண்டாகாமற் போகவே உணவில்லாமையால் உயிர்கள் பசியால் இறக்குமென்பதற்கு ஐயம் யாண்டையது?

4.'மழையென்னும் வருவாய் தன்பயன் குறைந்தால், உழவர்கள் ஏர்கொண்டு உழுதலைச் செய்யமாட்டார்கள்.' வானோக்கி வாழுங் குடிகள் மழைவளங்குன்றினால் என்ன செய்யமாட்டுவார்கள்? எங்ஙனம் ஏர்கொண்டுழுவார்கள்? உழவர்கள் ஏர்பிடிக்காதபோது, புலங்களில் பயிர்கள் எங்ஙனம் விளையும்? பயிர்கள் விளையாதபோது உணவு எங்கிருந்து கிடைக்கும்? உணவில்லையேல் உயிர்கள் உண்டோ?

5.'பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாய்ப் பெய்துமுன் கெடுத்

2.துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3.விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

4.ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5.கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

தாற்போல எடுப்பதும் இவையெல்லாம் வல்லதுமழையேயாகும்.' மழை பெய்யாதொழியுமேல் எத்துணைப் பெருஞ் செல்வம் படைத்தவராயினும் அவர் வளங்குன்றியழிதலையும், மழை பெய்யுமேல் அங்ஙனம் அழிந்தவர்கள் அதனால்மறுபடியும்வளம்பெற்று வாழ்தலையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். மக்களதுகேட்டிற்கும் ஆக்கத்திற்கும் மழையே காரணமாயுள்ளது. ஆதலின் மழையினது ஆற்றல் வழுத்தற்கெளியதோ?

6.'மேகத்தினின்றும் துளிகள் வீழ்ந்தாற் காண்பதல்லது, வீழாதாயின், அப்பொழுதே பசும் புல்லினது தலையையும் காண்பது அரிது.' வானத்தினின்று மழை பெய்யாவிடில் புல் முதலியன முளைக்கமாட்டா. ஓரறிவுயிராகிய புல் முதலாயினவும் உண்டாகாவெனவே மற்றைப் பொருள்கள் உண்டாகாவென உரைக்கவும் வேண்டுமோ?

7.'மேகமானது கடலின்கண் முகந்து அதன்கண் மழை பெய்யாதுவிடுமானால், அளவில்லாத அக்கடலும் தன்னியல்பு குறையும்.' மழையில்லையேல் கடலில் மீன் முதலிய நீர்வாழுயிர்கள் பிறவா. முத்து முதலிய பொருள்கள் உண்டாகமாட்டா. மழைக்கு முதலாகிய கடலுக்கும் மழை வேண்டுமானால் மற்றவற்றிற்கு வேண்டுமென்று வழுத்துவதெதற்கு? உலகம் நடத்தற்கே யேதுவாயுள்ளது மழையென்றுணர்க.

8.'மழை பெய்யாதாயின், தேவர்களுக்கும் இவ்வுலகில் மக்களாற் செய்யப்படும் திருவிழாவும் பூசையும் நடைபெறமாட்டா.' கடவுளர்க்குச் செய்யும் நித்தியமாகிய பூசை முதலியனவும், நித்தியத்திற்றாழ்வு தீரச்செய்யும் நைமித்திகமாகிய திருவிழா முதலியனவும், மழைபெய்து உலகம் வளம்பெற்றிருந்தா

6.விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

7.நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

8 சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

லன்றோ நடைபெறும்? பூசைக்குரிய பொருள்களும், பூசைசெய்பவர்களும் நிலைபெறாதபோது அவை எங்ஙனம் நடைபெறும்? ஒன்றும் நடவாதென்க. அம்மட்டோ!

9.'மழை பெய்யாதாயின், அகன்ற உலகின்கண், தானமும் தவமுமாகிய இரண்டறங்களும் உண்டாகமாட்டா.' அறநெறியால் வந்த பொருளைத் தகுதியுடையார்க்கு மகிழ்ச்சியோடுங் கொடுத்தல் தானமெனப்படும். மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலியன தவம் எனப்படும். பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின்மேலும் நிற்குமென்பர். மழைவளங் குன்றுமேல் இவ்விரண்டும் நடைபெறுதலில்லை.

10.'எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் பொருந்தாதாயின் அந்நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கும் மழையையின்றியமையாது.' நீரில்லாமல் பொருள் இன்பங்களாகிய உலகியல் அமையுமா? ஒருபோதும் அமையாது. நீரினாலே பொருளின்பங்கள் அமைவதுபோல, மழையினாலே அந்நீர் எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல் அமையும். இங்ஙனம் அறம் பொருளின்பங்கள் நடத்தற்கு மழை ஏதுவாயிருத்தலின், மழையின் சிறப்புச் சாலப்பெரிதென்க.

இதுகாறுங் கூறியவாற்றால், மழையானது அமிழ்தத்துக்கு ஒப்பானதென்பதும், உயிர்களது பசியையும்நீர்வேட்கையையும்நீக்குகின்றதென்பதும், மழையில்லையேல் உயிர்களைப்பசிவருத்துமென்பதும், உழவர்கள் ஏர்பிடித்து உழுதல் செய்யாரென்பதும், மக்கள் ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் மழையே காரணமாயுள்ளதென்பதும், மழைத்துளி விழுந்தாலல்லாமல் புல்முதலியனவும் தோன்றாவென்பதும், கடலுக்கும்மழைவேண்டுமென்பதும், இங்

9.தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10.நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

னனம் உலகம் நடத்தற்கு மழை ஏதுவாயுள்ளதென்பதும், மழையில்லையேல் தேவர்கட்கும் நித்திய நைமித்திகங்கள் நடவாவென்பதும், தானம் தவமிரண்டும் தங்காவென்பதும், இங்ஙனம் அறம் பொருளின்பங்கள் நடத்தற்கு ஏதுவாகிய நீரானது மழையையின்றி இல்லையென்பதும் பிறவும் பெறப்பட்டன.

தமிழ் மருத்துவப் பெட்டி.

(பதார்த்தகுண சிந்தாமணி.)

மாதுளம்பழத்தின் குணம். இதுவே தாடிமக்கனி.

(தேரையர்.)

வெண்பா.

சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சந்நியா சஞ்சர்த்தி
யங்கையதி தாகமமைச் சாருமோ — கங்கை
யிருந்தாடி மக்கட் கிரத்தலைச்செய் நோய்போம்
இருந்தாடி மக்கனிகட் கெண்.

வாய்நீரூ றல்கசப்பு வாந்திவிக்கன் மந்தமிகக்
காய்வெப்ப நெஞ்செரிவு காதடைப்பு — ஓயா
மயக்கமுந் தீர்ந்துவிடு மாதுளம்ப ழத்தால்
தயக்கமனத் தேமொழியே சாற்று.

விருத்தம்.

வெடித்துவீழ் பழத்தை வாங்கி மெல்லிய சீலை கட்டிக்
கடுக்கெனப் பிழிந்து கொண்டு கண்டதற் கிணங்கக் கூட்டிக்
குடித்திட வெப்பு மாறுங் குளிர்ந்திடு மங்க மெல்லாம்
வடித்தநன் மொழியி னளே மாதுளம் பழத்தின் சாறே.

இ-ள். மாதுளங்கனிகளுக்கு, நினைப்பையும் பேச்சையும் ஒழிக்கின்ற சந்நியாசரோகம், வாந்தி, கபம், மிகுதாகம், பித்தநோய் இவை அங்குச் சேரமாட்டா. புத்திரனிமித்தம் கங்கையிலாடி யாசிக்கச்செய்யும் மலட்டுநோய் நீங்கும். மேலும் அப் பழத்தைத் தின்பதனல் வாய்நீர்ச் சுரப்பும், வாந்தியும், விக்கலும், மாந்தமும், அதிசுரமும், நெஞ்செரிவும், காதடைப்பும், நீங்காத மயக்கமும் ஒழியும். வெடித்த அப் பழத்தைச் சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய சீலையால் வடிகட்டி, தகுந்த கற்கண்டு

சேர்த்து இரசத்தைச் சாப்பிட, வெப்பம் நீங்கும், சரீரமுழுதும் குளிர்ச்சியடையும் என்க.

விளாம்பழத்தின் குணம்.

வெண்பா.

எப்போது மெய்க்கிதமா மீளையிரு மல்கபமும்
வெப்பாருந் தாகமும்போ மெய்ப்பசியாம் — இப்புவியில்
என்றுகி லுங்கனிமே லிச்சைவைத்துத் தின்னவெண்ணித்
தின்றால் விளாங்கனியைத் தின்.

இ—ள். விளாம்பழத்தினால் சுவாசம், காசம், கபாதிக்கம், பித்த தாகம் - இவை விலகும். உடலுக்குச்சுகமும், நல்ல பசியுமுண்டாகும்.

இலந்தைப் பழத்தின் குணம்.

பித்த மயக்கருசி போம் பெருவாந்தி
மொத்தனில மெல்லா முடிக்கிடுங்காண் — மெத்த
உலர்ந்த வெறுவயிற்று லுண்டா லெரிவாம்
இலந்தை நறுங்கனியை யெண்.

இ—ள். இலந்தைப்பழத்தால் பித்தமூர்ச்சை, அரோசிகம், திரிதோஷம், வாந்தி, வலி வாதம் - இவைபோம். இதைப் பசியிலுண்டால் எரிவுண்டாம்.

மாம்பழத்தின் குணம்.

தின்றாற் றினவெடுக்குந் தீபனம்போ நெஞ்செரிவாம்
அன்றே விழிநோ யடருங்காண் — துன்றிமிக
வாதக் கரப்பனும் வன்கிரந்தி யும்பெருகும்
சூதக் கனியின் சுகம்.

இ—ள் மாம்பழத்தை புண்ணில் நமைச்சலும், மார்பு எரிச்சலும், கண்ணோயும், கருங் கரப்பானும், கிரந்தியும் அதிகரிக்கும். பசி நீங்கு மென்க.

மாம்பழம், காய், பிஞ்சு - இவைகளின் குணம்.

விருத்தம்.

வேத சத்திய மாக விளம்புவோம்
தாது விர்த்திக்குந் தம்பன மாங்கனி
போத மர்த்தனம் புன்காயி னல்வடு
வாத பித்தங் கபங்களை மாற்றுமே.

இ—ள். மாம்பழம் சுக்கிலப் பெருக்கத்திற்கும், அதைக் கட்டுவ தற்கும் ஆகும். காயினால் அறிவுகெடும். பிஞ்சு திரிதோஷ கபத்தை நீக்கு மென்க.

பலாப்பழத்தின் குணம்.

வெண்பா.

தித்திக்கும் வாத சிலேஷ்மபித்த முண்டாக்கும்
மெத்தக் கரப்பான் விளைவிக்கும் — சத்தியமாய்
சோராப் பிணியையெலாஞ் சேர்ப்பிக்கு மோர்நொடியிற்
பாராய் பலாவின் பழம்.

இ—ள். இனிப்புள்ள பலாப்பழம் வாத கப பித்த தொந்தங்களையும், கரப்பானையும், முன்பில்லாத பிணிகளையும் உண்டாக்கும் என்க.

வாழைப்பழத்தின் பொதுக்குணம்.

(தேரையர்.)

சுத்த வருச்சுனஞ்செய் சோமரோ யென்பதுவும்
பித்தரோ யென்னப் பிறந்தவையும் — முத்தி
வரம்பைக் கடந்த மதமூர்ச்சை யும்போம்
அரம்பைக் கனியுண் டறி

இ—ள். வாழைப் பழத்தால்உடம்பை வெளுக்கச் செய்கிற சோம ரோகம், பித்தப் பிணிகள்,மதநோய்,மூர்ச்சை ஆகிய இவைபோம் என்க.

எண்வகை வாழைப்பழத்தின் குணம்.

செவ்வாழை வெள்வாழை சேர்ந்தரச தாளிமொந்தன்
ஒவ்வு மவைநோக் குலகத்திற் — கவ்வடுக்கு
வாழைமலை வாழைபசு வாழைகரு வாழைகளி
லூழிகரு வாழைநன்று மோர்.

ஓதலுற்ற வாழை யெட்டி லுற்ற கனிகளெல்லாம்
வாதநோய்க் காகாது வையகத்தோர் — போதவுண்ண
எண்ணமுன் டாயி னிதற்கிவைந்து சத்துருவோ
டுண்ண விடரின் றரை.

இ—ள். செவ்வாழை, வெள்ளைவாழை, ரசதாளி, மொந்தன், அடுக்குவாழை, மலைவாழை, பச்சைவாழை, கருவாழை — என்னும் எட்டு வகை வாழைப்பழங்களுள், முதலிற் கூறிய நாலும் நோயாளர்க்கு ஆகும். மற்ற நாலில் கருவாழை நன்மையைத்தரும். இவ் வெண்வகைப் பழங்

களும் வாதரோகிகட்கு உதவாது. ஆனால் அசனத்துடன் உண்ணில குற்றமில்லை.

பேயன் வாழைப்பழத்தின் குணம்.

பேயன் பழமருந்திற் பித்தரோ கம்போகும்
வாயுவுண் டாகு மலங்கழியும் — தீயே
தகத்தி லதிகுளிர்ச்சி யாகு மணங்கே
சகத்தி லிதையறியச் சாற்று.

இ–ம். பெண்ணே! பேயன்பழத்தினால் பித்தமும், உட்சூடும் நீங்கும். வாதாதிக்கமும், மிகு குளிர்ச்சியும், தடையின்றி மலமிறங்கலும் உண்டாகும் என்க.

மொந்தன் வாழைப்பழத்தின் குணம்.

மந்தமுட னேய்கனத்தல் வாதவலி சீதம்
தொந்தமுறு தாகமிவை தோன் றுங்காண் — புந்திவலி
யோட்டுபித்தங் காமாலை யுள்வறட்சி யுந்தொலையும்
நாட்டுமொந் தன்பழத்தி னால்.

இ–ள். மொந்தன் பழத்தினால் அக்கினிமந்தம், உடல்வலியுடன் பாரிப்பு, இசிவு, சீதளம், திரிதோஷ தாகம் இவையுண்டாகும். மன வுறுதியை விலக்குகிற பித்தம், காமாலை, மேதோ தாதுவைப்பற்றிய வறட்சி இவை நீங்குமென்க.

நவரை வாழைப்பழத்தின் குணம்.

மாந்த மொடுநமைச்சல் வாதகப மும்பெருகும்
பாந்த லுறுகரப்பான் பாவுங்காண் — பூந்தடக்கை
யாழைப் பழித்தமொழி யன்னமே கேணவரை
வாழைப் பழத்தான் மதி.

இ–ள். அழகு பொருந்திய கையையும் யாழைப்பழித்த மொழி யையுமுடைய அன்னமே! நவரை வாழைப்பழத்தால் மந்தாக்கினி, தினவு, வாதசிலேஷ்மதொந்தம், கரப்பான் ஆகிய இவைகள் அதிகரிக்கு மென்க.

ஓர் மருத்துவன்.

கண்மணி கமலா.

நீதிபுகட்டும் ஓர் இனிய தமிழ் நாவல்.

(வெண்டாமரை ௫, இதழ் ௮-௧, 163-ம் பக்கத் தொடர்ச்சி.)

௨ வது அத்தியாயம்.

சுப்பையன் திருவதிகையை விட்டுச் சென்ற இரண்டு நாழிகைக்கெல்லாம் சதாசிவசாஸ்திரிகள் கிருகத்தில் மணவினைகள் வெகு ஆடம்பரமாகவும் மனோகரமாகவும் தொடங்கப்பட்டன.

பல்லாண்டுகளாக மானிய நில வருவாயில் தம் சொற்ப மனைவருத்தனைக்குச் சிறிது சென்றதுபோக, மிகுதிப்பட்டுக் குவிந்துகிடந்த ஏராளமான ரொக்கத்தில் விவாக செலவுக்கென்று சுப்பையன் கேட்டதையெல்லாம் கணக்கு வழக்கில்லாமல் சாஸ்திரிகள் வாரிவாரிக்கொடுத்திருந்தார். சுப்பையனும் தன் சொத்து, பிறர் சொத்து என்னும் பேதாபேதத்தை வழக்கத்தில் அனுசரிப்பவனல்லனெனினும். ஏற்கனவே பொருளாசையினால் சாஸ்திரிகள் சம்பந்த விஷயத்தில் தான் சுமத்திக்கொண்ட பெரும்பழி தன் மனதைப் புண்படுத்திக்கொண்டிருந்ததினால் அவர்கொடுத்த தொகைகளில் கிஞ்சித்தும் தன் சுய உபயோகத்திற்குக் கையாடாமல் முற்றும் கலியாணச் செலவுகளுக்கே மிகவும் விமரிசையாக உபயோகித்தான்.

சாஸ்திரிகள் கிருகத்திற்கு எதிரிலிருந்த விஸ்தாரமான இடைவெளியில் ஆயிரக்கால் மண்டபம் எனும்படி ஓர் பிரமாண்டமான சித்திரக் கொட்டகை யமைக்கப்பட்டது. அக் கொட்டகை முற்றும் சென்னை, தஞ்சை, புதுவையில் கைதேர்ந்த சிற்ப நிபுணர்களால் கண்டவர்கள் கண்ணைக்கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டது. அன்று மலர்ந்த தொத்தநானாவிதச் சேர்க்கைப் பூங்கொத்துகளும், பல்வேறு வர்ணத்தோரணங்களும், ஆடியாலமைந்த விதம் விதமான தீபங்களும், சொர்ணமயக் காந்தருவப் பிரதிமைகளும் பந்தரின் எப்பக்கங்களிலும் விசித்திரமாக ஊசலாடிக்கொண்டிருந்தன.

மணமகள் இறங்கியிருந்த மாளிகையினின்று சாஸ்திரிகள் கிருகம் வரையிலுமுள்ள தெருக்களிலெல்லாம் கமுகு, தெங்கு, ஈந்து, பனை, வாழைகளும், பலவர்ணத் தோரணங்களும், துவசங்களும் நாட்டப்பட்டன. தரையெல்லாம் பழமணல்போக்கிப் புதுமணல் பரப்பி, பூவிதழ்களினாலும், மாந்தளிர்களினாலும், கோரைப்புற்களினாலும் மறைத்தனர்.

முகூர்த்தத்திற்கு ஒரு நாழிகைக்கு முன்னரே, மணமகளை விவாக மனைக்கு அழைத்துவருதற்கு, சுமங்கலிய ஸ்திரீகள் ஊர்வலமாகச் சென்றனர்.

தங்கத் தாம்பாளங்களில் நறுமலரேந்திய நாரியரும், கனிவகை சுமந்த காரிகையரும், அணிபல கொணரும் அரிவையரும், பாகடையேந்திய பாவையரும், பொற்றட்டில் பீதாம்பரம் கொணரும் பூவையரும், வாசச்சாந்தைப் பொற்கிண்ணங்களில் தாங்கிய வனிதையரும், மங்களம்பாடும் மங்கையருமாகச் சுமங்கலிகள் எண்ணிலர் அன்ன நடையும் பின்னிடைய நடந்துவர, அந்தணர் பலர் ஆசிகூற, பாணர் இன்னிசைபாட, தசவாத்தியங்களும் உவாக்கடல் முழக்கென ஒலிக்க, சிவகாமியம்மையை முத்துச் சிவிகையில் ஏற்றிவந்து, ஆலத்தியெடுத்து, கற்பூரங் கொளுத்தி, தேங்காய் உடைத்துத் திருஷ்டிகழித்து மண மனை புகுத்தினர்.

மணமகன் காசியாத்திரை நடித்தபின்னர், தம்பதிகளை மங்கள நீராடவைத்து மறைமுறை தவறாதியற்றிய மணத்தவிசிலேற்றினர். பல்லியங்களும் முழங்கியார்ப்ப, நீந்தருங் கடலென நிறைந்த அந்தணர் குழாங்கள் ஆசிகூற, பலாசிற் செய்த துடுப்பினெய் பெய்யக் கொழுந்துவிட்டெரியும் அழற் கடவுள் சாட்சியாக, கந்தசாமிஐயர் கலச நன்னீர் சொரிந்து மீனாக்ஷியம்மையைக் கன்னிகாதானம் செய்துகொடுக்க, சதாசிவ சாஸ்திரிகள் மணமகள் கழுத்தில் மாங்கல்ய தாரணம் செய்தனர்.

தீவலம் வருதல், அம்மிமிதித்தல், அருந்ததிகாட்டல், மற்றும் சோதிடாங்கத்தில் மன்னர்க்கு முன்னோர்க்குக் கூறியுள்ள நெறியிலே பிறழா மணவினைமுற்றும் பூரணமாயிற்று.

திருவதிகைச் சாஸ்திரிகள் கிருகத்தில் நடக்கும் ஒவ்வொரு விவாகத்திலும் பலபல தான தர்மங்கள் இயற்றுதல் அவர் வமிசத்தினர் பாரம்பரிய ஐதிகமாதலின், அவ்வாறே தம் மணத்தினத் தன்றும் ஆன்றோர் வகுத்த முப்பத்திரண்டு அறச்செயல்களில் தம்மாலியன்றவைகளைச் சதாசிவசாஸ்திரிகள் செய்து முடித்தனர்.

தமக்கு நடந்த சுபமுகூர்த்தத்திலேயே தம் கிருகத்திற் கெதிரில் வசித்துவந்த ஏழைப் பிராமணனொருவனுக்குப் பொருளுதவிசெய்து கன்னிகாதானம் செய்துவைத்தனர். ஆதுல அந்தணர் மூவர்க்கு இல்லம் சமைப்பித்துக் கிருகப் பிரவேசமும் செய்வித்தனர். ஏழு விப்பிரர்கட்குக் கறவைப் பசுவும் கன்றுமாகக் கோதானம் கொடுத்தார். பத்துப் பார்ப்பனர்கட்குப் பஞ்சலோகப் பாத்திரமும் பட்டுவேஷ்டியும் ஈந்தார்.

இற்றைக்கும் திருவதிகையில் பாப்பான் குளமென்றும், பாப்பான் தோப்பென்றும் வழங்கிவரும் தடாகத்தைத் தோண்டுவித்துச் சோலையை யுண்டாக்கினார். கருங்கல்லினால் நூறு ஆவுறஞ்சுதறி செய்வித்துப் பல கிராமங்களிலும் மேய்ச்சல் நிலங்களில் நாட்டுவித்தார்.

விவாகத்திற்கு வந்த சுமங்கலிகளுக் கெல்லாம், தேங்காய், பழம், சர்க்கரை, புஷ்பம், கண்ணாடி மஞ்சள், குங்குமமும் ஏராளமாகத் தாம்பூலத்தோடு வழங்கப்பட்டன

திருவதிகைச் சாஸ்திரிகள் கிருகத்தில் விவாகம் நடக்கும்போதெல்லாம் சில்லரையல்ல முழுரூபாயும், மூன்று தினம் திவ்விய போஜனமும் எத்தனை பிராமணர் வரினும் அனைவர்க்கும் கிடைக்குமென்பது கர்ண பரம்பரையாய் யாவரும் அறிந்திருந்ததால், எள்ளிறைத்தால் உள் நுழையாதபடி மணப்பந்தரில் அந்தணர் மண்டியிருந்தனர். ஐயர்களென்றும், ஐயங்கார்களென்றும், ஆசாரிகளென்றும், ஆசார்லுகள் என்றும், சர்மாக்களென்றும், குருக்களென்றும், சாஸ்திரிகளென்றும், தீக்ஷிதர்களென்றும், எந்துநூல் மார்பர் எண்ணிலர், மாரிக் காலத்தில் மண் பிளக்க எழுகின்ற ஈசல்கள்போலக் கலியாண மண்டபத்தில் மொய்த்துக்கொண்டனர்.

“அப்பப்பா! இத்தனைபேருக்கும் அழுதுதொலைக்கவேண்டுமே, இவர்களையெல்லாம் ஓலமிட்டழைத்ததார்?

தக்க தக்ஷிணை பூரி கிடைக்குமிடங்களில் சுபாசுபங்கள் நடந்தால் இவர்களுக்கு மூக்கில்தான் வேர்க்குமோ? அல்லது என்னவோ கம்பியில்லாத் தந்தியென்கிறார்களே அதை யிவர்கள் ஆதிகாலந்தொட்டு இரகசியமாக இதுவிஷயத்தில் கையாடித்தான் வருகிறார்களோ? அம்மம்ம! எத்தனைபேர்! எத்தனைபேர்!” என்று கந்தசாமி ஐயரும் மீனாட்சியம்மையும் முணுமுணுத்துக்கொண்டிருந்தனர்.

சதாசிவ சாஸ்திரிகளோ, வந்த விப்பிரர்களுக்கெல்லாம் நல்வரவு கூறி யுபசரித்து மந்திரத்தாலும் தந்திரத்தாலும் விவாகக் கிரியைகளில் சம்பந்தப்பட்ட பிராமணர் ஒவ்வொருவருக்கும் ஒரு பொற்காசும், ஏனையவர்களுக்குத் தலைக்குத் தாம்பூலத்துடன் தக்ஷிணை ரூபாய் ஒன்றும் சமர்ப்பிக்கும்படி தம் நண்பர் சாம்பமூர்த்தி ஐயரிடம் இருபது தங்க மோகராக்களும் இரண்டாயிரம் ரூபாய்களும் கொடுத்திருந்தார். ஒரு நாழிகைக்குள் கொடுத்த ரூபாய்கள் ஆய்விட்டதனால் பெட்டியினின்று வேறொரு பணப்பையும் எடுத்து வரவேண்டியிருந்தது.

தன் மருமகனார் பொருளெல்லாம் இவ்வாறாக நானாவித தருமங்களில் நான் தடுக்கக்கூடாதவண்ணம் அழிவதை மனந்துடிக்கக் கண் வெடிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள் மீனாக்ஷியம்மை.

திடீரெனத் தக்ஷிணைவாங்குவதற்குக் கையேந்திநின்ற ஒரு பிராமணனருகில் விரைந்துசென்று: "இந்த கெட்டைப் பார்ப்பானை கெட்டித்தள்ளுங்கள்; முன்னமொருதரம் தக்ஷிணை வாங்கிக்கொண்டு இன்னமும் வந்து கைநீட்டுகின்றான் சற்று நேரத்திற்கு முந்தி நாமமிட்டுக்கொண்டு வந்தவன் இப்போது திருநீறு பூசிக்கொண்டு வந்திருக்கிறான்" என்று குட்டியையிழந்த பெண்புலிபோல் கர்ச்சித்தாள் மீனாக்ஷியம்மை.

அவள் கூறியதும் உண்மையே. இந்த எழைப் பிராமணனிடத்தில் தன் கிளப்பில் அரைக்கிரயம் பெற்றுக்கொண்டு அவனுக்கு அரைவயிற்று அன்னம் படைத்தல் வழக்கமாதலால், இவன் இன்னானென்று அறிந்துகொள்வது அவளுக்குச் சுலபமாயிருந்தது. தன் வயிற்றுக்கொடுமையினாலும் பொருளாசையினாலும் தன் வேஷத்தை மாற்றிக்கொண்டு மற்றொரு தக்ஷிணைக்குக் கைநீட்டிய ஐயங்கார், மீனாக்ஷியம்மையின் கர்ச்சனையைக் கேட்டவுடன் இடியோசைகேட்ட அரவம்போல ஸ்தம்பித்து நின்று விட்டான்.

சிவபூசை நடுவில் கரடிவந்தாடியதுபோல, இம்மங்களகரமான மகா சபையில் நாற்குணங்களில் முந்திய முக்குணங்களையும் முற்றுந் துறந்தவளாய் அரக்கிபோல அலறிக்கொண்டுவந்த ஆடவளைச் சதாசிவசாஸ்திரிகள் சற்றுக் கடுமையாக உற்றுநோக்கினார். இதுவரையில் அவர் எந்த ஸ்திரீயின் முகத்தையும் எறெடுத்துப் பார்த்தவரல்லர். தம் மனத்திலெழுந்த சிற்றத்தை யொருவாறாக மாற்றிக்கொண்டு: "அம்மையரே! ஈவது விலக்கேல். இவ் வேழைப்பிராமணர் கபடமாக இருதரம் தக்ஷிணை பெற்றுக்கொண்டால் என்ன குடிமுழுகிப்போகிறது! எந்தக் கிருகத்தில் வந்த அதிதிக்கு இல்லை யென்கிறார்களோ அந்தக் கிருகத்தின் புண்ணிய லாபங்களையெல்லாம் அவ்வதிதி கைக்கொண்டுதன் பாவங்களையெல்லாம் அக் கிருகத்திலேயே விட்டுச்செல்கிறானென்று சாத்திரங்களெல்லாம் முறையிடுகின்றனவே" என்று தயாநிதியாகிய சதாசிவ சாஸ்திரிகள் வெகு சாந்தமாகக் கூறினார்.

"நன்னாயிருக்கு, சாஸ்திரியனுடைய சாஸ்திரம். ஒருவன் நம்மாத்திலே திருடவந்தால் இருக்கும் பண்டங்களையெல்லாம் கொட்டிக் கொடுக்கணுமாக்கும், அல்லாவிட்டால் கள்ளன் தன் பாவத்தையெல்லாம்

அவுத்துக்கொட்டிவிட்டு, நம் புண்ணியங்களையெல்லாம் மூட்டைகட்டிக் கொண்டு போவானுக்கும். நன்னாயிருக்கு! இந்த சாஸ்திரமெல்லாம் பொழைக்கமாட்டாத சோம்பேறி ஆண்டிப்பயல்கள் கட்டிவைத்தாளாக்கும்" என்று முணுமுணுத்துக்கொண்டே அவ் விடத்தை விட்டுச் சரேலென்று விலகினாள்.

சிவகாமியம்மை சொன்னதைக் கேட்டு இலௌகிக பிராமணர்களெல்லாம் கலகலவென்று நகைத்தார்கள். வைதிக வேதியர்கள் அரகர சிவசிவ என்று காதுகளைப் பொத்திக்கொண்டனர்.

தம் அருகில் அமர்ந்திருந்த நண்பர் சாம்பமூர்த்தி ஐயரைப் பார்த்து, சாஸ்திரிகள், "ஒரு தக்ஷிணைக்காக இவ்வளவு ஆத்திரப்படும் ஆடவள் யார்?" என இரகசியமாய் வினவினார்.

"என்ன சாஸ்திரிகள்! கந்தசாமி ஐயர் அகமுடையாள் மீனாக்ஷியம்மையரெனத் தெரியவில்லையா?" என்றார்.

"தங்கள் அத்தையர்க்கன்றி, தங்கள் பொருள் செலவழிவதில், வேறொருவர்க்கு இத்தனை அக்கரையிருக்குமா?" என்றார் புன்னகை பூத்த முகத்துடன் அருகிலிருந்த விகட வேங்கடராமையர்.

அப்போதுதான் மீனாக்ஷியம்மை தம் தாரத்தின் தாயென்று சதாசிவ சாஸ்திரிகள் அறிந்துகொண்டார். இத்தகைய குணம் படைத்த அத்தையர் தமக்கு வாய்த்ததைப்பற்றி மிகவும் துக்கித்தார். "ஆய்ந்தோய்ந்து பாராதவன் காரியமெல்லாம் சாந்துயரந்தரும்" என்பதின் உண்மையை யுணர்ந்தார் மீறிவிட்டதற்காக உளமெலிதல் மடமையென்று தம் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, மேல் நடக்க வேண்டிய காரியங்களைக் கவனித்தார்.

(வரும்.)

தம்பி – புருஷோத்தமன்.

மநு.

மநு எனப் பெயரிய மன்னவன் ஆதித்தனுக்கு மகனாயும், சோழர் குடிக்கு ஆதிமுன்னோனாயும் விளங்கியவன். இவன், தன்மகன் ஓர் ஆன் கன்றின் மீது அறியாது தேரைச்செலுத்தினனாக, அதன் பொருட்டு அவனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்து முறைசெய்து புகழெய்தின

னென்ப. இதனை, "அவ் வருக்கன் மகனாகி மநு மேதினிபுரந், தரிய காதலனை யாவினது கன்று நிகரென், றெவ் வருக்கமும் வியப்பமுறை செய்த கதையும்" என்று கலிங்கத்துப் பரணியும், "மையல்கூர், சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின், மைந்தனையூர்ந்த மநுவோனும்" என்று விக்கிரமசோழனுலாவும் குறிப்பிடுகின்றன. இக் கதையினை நம் அருண்மொழித் தேவராம் சேக்கிழார்குரிசில் திருத்தொண்டர் புராணத்து மதுரம் பழுத்தொழுகு செந்தமிழ்ப்பாடலின் வளம்பட விரித்துரைத்தனர். அதிலிருந்து, இவன் திருவாரூரைத் தலைநகராக்கொண்டு அரசு புரிந்தவனென்றும், எண்ணிலாத வேள்விகளியற்றியவ னென்றும், சிவபத்தி முதிர்ச்சியுற்று இறைவன் திருவருள் வழியே நின்றவனென்றும், அணுத்துணையும் நீதி தவறாதவனென்றும், தான் மகனை முறைசெய்த போழ்தத்து அடியார்க் கெளியராம் சிவ பரம்பொருள் திருவாரூர்த் திருவீதியிற் றோன்றி நின்றருள்செய்யப் பெற்றவனென்றும் விளக்கமுறுகின்றது.

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடுங் கவிவலவராகிய சேக்கிழார் ஆண்டு அருளிச்செய்த

"தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்."—

என்பது முதலிய செய்யுட்கள் கருங்கன் மனமும் கசிந்துருகச்செய்யும் பெற்றியன. இனி,

"துன்னும் வெங்கதிரோன்வழித் தோன்றினன்" என்றும், "செற்ற நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்-பெற்ற நீதியுந் தன்பெயராக்கினன்" என்றும், "தொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை, மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்" என்றும் ஆசிரியர் சேக்கிழார் கூறுதலின், இவ் வரசன் சூரியன் வழித்தோன்றலென்பதும், இவன் தனது செம்மையினாலே, பூர்வத்து மனுவினாற் காணப்பட்ட நீதியையும் தன் பெயராகச்செய்து கொண்டான்: ஆவது, மநுநீதிகண்ட சோழன் என்றுபெயர் சிறப்பானாயினனென்பதும் அவர் கருத்தாதல் தெள்ளிது.

அங்ஙனமாக, — சயங்கொண்டார், கூத்தர் முதலாயினாரெல்லாம் மகனைமுறைசெய்த மநுவினைச் சூரியன் குமாரனாகவே அம்முறை நிறுத்துக்கூறிச் செல்வாராயினர். அவர்கள், மநுவேறு, மநுநீதிகண்ட

சோழர் வேறு என்பது தெளிய யாதுங் கூறிற்றிலர். திருத்தொண்டர் புராணத்துக் கூறப்பட்டவர் சூரியன் மகனாகிய வைவச்சுத மனுவே யென்றும், மனுநூல் தந்த தொன்மனு வாவார் புராணங்கள் கூறியவாறு முதன் மனுவாயிருந்த சுவாயம்புவே யென்றும் கொள்ளின் ஏனோர் கொள்கையொடு முரணுமா றில்லை. ஆயின், வெங்கதிரோன் மகனெனக் கூறாது, “வெங்கதிரோன்வழித்தோன்றினான்” என்று சேக்கிழார் கூறுதலின் அவர்கருத் தெம்மா லறிவரிதாகின்றது.

மனுநீதிகண்ட சோழன் மகன் வரராமதேவசோழன், அவன்மகன் குளக்கோட்டன்: அவன் திரிகோண மலைக்குவந்து ஆங்குள்ள சிவாலயம் புதுக்கி நிபந்தம் அமைத்தானென்றும், அது நிகழ்ந்தது கலியுகம் 512-இடபமதி, 10உ என்றும் திரிகோணமலைக் கல்வெட்டுக் கூறுகிறதென்றும், இது நம்பத்தக்க புராதன சாசனம் என்றும் திருமகன், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கூறுவர். செந்தமிழ்.) ஆதித்தன் பின்வந்து மநு எனும் பெயருடன் விளங்கியவர் ஒருவரேயாக, அன்றி இருவரேயாக, அவர் சோழர்குடிக்கு முன்னோரென்று கூறுதலிற்றவறிலதென்க. இங்ஙனம் செயற்கருஞ் செயல்புரிந்து பெருமையெய்திய வித்தக மநுத்தோன்றலைப் பழைய தமிழ்ப் புலவரெல்லாம் சோழர்குடியின் பெருமை தெரிப்பான்வேண்டி ஏற்ற வேற்ற இடந்தொறும் எடுத்தோதிப் போற்றுவாராயினர். இதனை—

“வாயிற்கடைமணி நடுநா நடுங்க, ஆவின்கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான் றன், அரும் பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன், பெரும்பெயர்ப் புகா ரென்பதியே” என்றும், “கறவைமுறைசெய்த காவலன்கா ணம்மானை” என்றும் சிலப்பதிகாரத்தும், “மகனைமுறை செய்த மன்னவன் வழியோர், துயர்வினையாளன் றோன்றினனென்பது, வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னம்” என்று மணிமேகலையிலும் போந்தனவற்றாற் றெளியலாம்.

“இறைகாக்கும் வையக மெல்லா மவனை, முறைகாக்கும் முட்டாச் செயின்” என்னுங் குறளுரையிற் பரிமேலழகரும் ‘முட்டாமற்செலுத்திய வாறு மகனைமுறைசெய்தான் கண்ணும், தன்கை குறைத்தான் கண்ணும் காண்க’ என்று கூறினர்.

மு. வேங்கடசாமி நாட்டார்,
S. P. G. காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,
திரிசிரபுரம்.

* முத்தபுரி இரகசியம்.

(உடையார்பாளையம்)

சப்த நதிகளுள் ஒன்றாகிய பொன்னி நதிக்கு உத்தர திசையில் சுமார் 10 மைல் தூரத்தில் ஸ்ரீ நறுமலர்ப்பூங்குழல்நாயகி சமேதராய் முத்தபுரீசுவரர் திருக்கோயில்கொண்டிருக்கும் ஓர் திவ்விய ஜமீன் ஸ்தல முளது. நான்முகனாலும், பார்த்திபனாலும், அங்காரகனாலும், ஸ்ரீராமராலும் பூஜிக்கப்பட்டது. அவைகளை நிரூபிக்கச் சிற்சில அறிகுறிகள் இன்றும் உள. அவ்வரிய க்ஷேத்திரமானது சுமார் 500 வருடங்களாக, காஞ்சிபுரத்திலிருந்துவந்த உடையார் அவர்கள் வம்சத்தாரால் பரம்பரையாகப் பரிபாலிக்கப்பட்டுவருகிறது. இதுவரை 22 பட்டங்களாக, இப்போது 23 வது பட்டதாராகிய ஸ்ரீமத் கச்சியுவரங்கப்ப காளாக்க தோழ உடையார் அவர்கள் வெகு நன்றாகக் குடிகளை இரக்ஷித்துவருகிறார்கள். இந்த ஜமீனுக்கு 65 கிராமங்களிருக்கின்றன. குடிகள் யாவரும் மிக்க இராஜ விசுவாசமுள்ளவர்கள். இந்த 65 கிராமங்களுக்கும் தலைமை ஸ்தானமாகவும், மகா ள–ள–ஸ்ரீ சமஸ்தானாதிபதி அவர்களின் வாசஸ்தலமாக உள்ளதுமான இந்த க்ஷேத்திரத்தின் பெருமையை இவ்வளவென்று சொல்லமுடியாது. இவ்விடத்தில் அநேகம் புராதன ஆலயங்களும், தடாகங்களும், மண்டபங்களும், மடங்களும், உன்னதமான ஓர் அரண்மனையுமிருக்கின்றன. கோயில்களிலும், அரண்மனையிலுமுள்ள சித்திரங்களையும், அழகிற்சிறந்த கல் சிலைகளையும் பார்த்தால் மனதைக் கவரும் மாண்புடைத்து. அதிலும் அரண்மனையின் ஒவ்வொரு பாகமும் சலவைக் கற்களாலும், முத்துப்போன்ற வெள்ளைக் கல்லுகளாலுமே கட்டப்பட்டுள்ளது. இதன் விபரத்தைப் பின் விரிவாகக் கூறுவாம். இவ்வளவு பெருமை வாய்ந்த ஸ்தலத்தின் அற்புதங்களை விவரமாய்க் கூறுவதற்கு ஒருவாறு பல பிரிவுகளாக வகுத்துக்கொள்வாம்.

கோயில்கள்:— இவணுள்ள சிவன் கோயிலானது திவாகரபுர வணிகனாகிய சந்திரகுப்தனென்னும் ஓர் வணிகனால் ஆதியில் கட்டப்பட்டதாக ஸ்தலபுராணத்தால் ஏற்படுகிறது. அதின் விபரம் ஆச்சரியமாயிருப்பதுபற்றிச் சுருக்கமாக விளக்குவாம்: சந்திரகுப்தனென்னும் வணிகன், யானை, ஒட்டை, குதிரைகளில் அளவிறந்த மிளகுப்பொதிகளை ஏற்றிக்கொண்டு வியாபாரம் செய்யப் புறப்பட்டுவந்து, முன் பத்திராரண்யமென்று பெயர்பெற்ற இந்த ஸ்தலத்தில் மாலைப்பொழுதாகிவிட்

---

* முத்தம் — பயறு.

டமையால் தங்கிப் பொதிகளை யிறக்கியபோது, பிரமாவினால் பூஜிக்கப்பட்டமையால் பிரம்மபுரீசுவரர் எனப் பெயர்பெற்ற எம்பெருமான் ஆலயத்திற்கு வழக்கமாகத் தீர்வைவாங்குவோர் ஷை வணிகனை இவை என்ன பொதி என வினவியபோது, குறைந்த தீர்வையையடையும்பொருட்டுச் சூதாகத் தாழ்ந்த தீர்வையையுடைய பயற்றுப்பொதிகள் என்று சொல்ல, அதற்கேற்பட்ட தீர்வையை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். வணிகன் வஞ்சித்துவிட்டோமென மனமகிழ்வுற்று இருந்தான். மறு நாட் காலையில் ஷை பொதிகளை ஏற்றிக்கொண்டு * திருமுதுகுன்றத்திற்குப் போய் வியாபாரம் செய்வதற்குப் பொதிகளைப் பிரித்துப் பார்க்க, எல்லாப் பொதிகளும் பயறாக இருந்தமை கண்டு மனந்திடுக்கிட்டு உடல் பதறி, சிவத்துரோகம் செய்ததாலன்றோ இவ்வாறுநேர்ந்ததென்றுஎண்ணி அவ்வூரிலுள்ள ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீ பழமலைநாதரை வணங்கித் தன் குறைகளைத் தெரிவித்து நிற்க, அசரீரியாய், "கெட்டவிடத்தில் தேடு" என்றுத்தரவாயிற்று. உடனே மனமகிழ்ந்து மறுபடியும் பத்திராரண்யம் சென்று ஸ்ரீ பிரம்மபுரீசுவரரை அஞ்சலியஸ்தனாய் வணங்கி, தான் அறியாது செய்த குற்றத்தைப் பொறுத்துப் பயற்றுப் பொதிகளை முன்போல் மிளகுப் பொதிகளாகும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்றும், அப்படியே ஆகிவிடும்பக்ஷத்தில், அதன்பொருளைக்கொண்டு கோயில் கட்டிவைப்பேன் என்றும்உறுதிசெய்துகொண்டான். உடனே "திருமுதுகுன்றம்போய்ப் பொதியவிழ்த்துப்பார்" என்றுஉத்தரவாக, அடிபணிந்து சென்று பொதிகளை யவிழ்த்துப்பார்த்தபோது, பயறுகளெல்லாம் மாறி மிளகுகளாக இருந்தமை கண்டு வியந்து, ஷை பொதிகள் விற்றுச் சம்பாதித்த பொருள்களைக்கொண்டு பத்திராரண்யம் சென்று கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து போனதாகவும், எல்லாம் வல்ல இறைவன் இத்தலத்தில் மிளகைப் பயறாக்கியதால் பயறணிசுவரர் என்றொரு காரணப் பெயரும் வழங்குவதாகவும் தெரிகிறது.

அதற்குச் சான்றாக:—

"நேருறு வணிகன் றன்னை நேயம்வைத் தடிமை கொள்ளக்
காருறு † கறியை § முற்க மாச்செய்த கார ணத்தாற்
பாரினி லதனா லன்றோ பயறணி நாத ரென்று
தேருறு வோர்கள் யாருஞ் செப்புவர் நாம மம்மா"

என ஸ்தலபுராணத்தில் அறியக் கிடக்கின்றது.

* திருமுதுகுன்றம்—விருத்தாசலம். † கறி—மிளகு. § முற்கம்—பயறு.

பின்னர், சிலமாய்ப்போன கோயிலின்பாகங்களைப் பழுதுபார்த்து இப்போது புதிதாக நிருமிக்கப்பட்ட கோயில்போல் செய்யப்பட்டிருக்கிறது. காலந்தோறும் பூஜை நைவேத்தியங்களும், பிரம்மோற்சவம் முதலியதும் சமஸ்தானத்தால் செய்யப்பட்டுவருகிறது.

புராதனமாக உள்ள இவ் வூர்ப் பெருமாள்கோயிலி லிருக்கும் ஒவ்வொரு விக்கிரகங்களும் கண்டோர் மனதைக் கவரும்இயல்புடையன. இராமர் சந்நிதியில் ஸ்ரீ இராமர், சீதாபிராட்டி இலக்ஷ்மணர் சமேதராய் வனவாசத்திற்கு மரவுரியோடு புறப்பட்ட தருணத்தில் எவ்வாறு இருந்தார்களோ அவ்விதம் நேரில்நின்று பேசுவதுபோலிருக்கிறது. கிருஷ்ணன் சந்நிதியில் கிருஷ்ணன் காளிங்க நர்த்தனத்தோடு நிற்பதைப் பார்த்தால் நேரில் எம்பெருமான் நர்த்தனம் செய்வதைப்போன்றேயிருக்கிறது. அனுமார் விக்கிரகங்கள் எராளமா யிருக்கின்றன. எல்லாச் சந்நிதிகளும் ஷெ கோயிலில் அடங்கியுள்ளன. இராஜவீதியிலிருக்கும் அனுமார் மிக்க சக்தி யுடையவர். வேண்டுவோர் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் வன்மை யுண்டு. திருமஞ்சனம் செய்து வடைமாலை சாத்திப் பார்த்தால் விசுவரூபத்தோடு எழுந்ததைப்போன்றிருக்கிறது. இவ்வளவு அருமையான விக்கிரகங்களையுடைய கோயில் சமஸ்தானத்தின் முன்னோர்களால் கட்டப்பட்டதே யன்றி வேறல்ல. இப்போதும் பழுது பார்த்துவரப்படுகிறது. பூஜை நைவேத்தியங்களும் காலந்தவறால் சமஸ்தானத்தால் செய்யப்பட்டுவருகின்றன.

(தொடரும்.)

S. V. G. பாலன்.

சிலோன் குஷ்டரோகிகளின் ஒரு வேண்டுகோள்.

ஐயா பத்திராதிப துரையே!

இவ் வேழை நோயாளிகளாகிய எங்கள்மீது பரிபூரண கடாட்சம் வைத்துத் தங்களருமையான பத்திர புத்திரியை யிலவசமாயனுப்பி ஆறுதலையுஞ் சந்தோஷத்தையு மெய்துவிக்குந் தங்கட்குப் பெரிதுங் கடப்பாடுடையவர்களாயிருக்கின்றோம். தயைகூர்ந்து இச் சிறு விடயத்

தைத்தங்கள் வித்தியாச் சிறுமியாகிய கலைமகளின் அங்கத்தோர் கோணத்திற் பொறித்துவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கண்ணியமிக்க புண்ணிய பிரபுக்களே !

கொழும்பைச் சேர்ந்தும் களனிநதி தீரத்திலுள்ளதும் ஹெந்தலையென்னும் பேர்பூண்டதுமான இவ்விடத்தில் ஆங்கில அரசாட்சியாரால் குஷ்டரோகிகட்கு அமைத்துள்ள ஆரோக்கிய சாலையிலுள்ள நாங்கள் அடையுந் துக்கமும் நோயின் வருத்தமுஞ் சொல்லத் தரமன்று. இப்படியாங்களடையு மாகூலத்தை ஒருவாறகற்றி ஆறுதலைக்காட்டிச் சந்தோஷத்தையூட்டிச் சமயாபிமானத்தில் நெஞ்சை நாட்டி யுறுதியைப் பூட்டி, துர்ச்செயலையோட்டி நல்வழியொழுகும்பொருட்டு இங்குள வைத்தியப் பிரதானிகரவர்கள், அழகியகட்டடமொன்றில் புத்தகசாலையும்வாசிகசாலையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்துரையின் செய்கை மிகவும் வியந்து புகழற்பாலது. ஆனால் இவ் வாசிக சாலையில் தமிழ்ப் புத்தகங்களொன்றுங்கிடையா. இது மிக விசனகரமே.

ஆகலின், இதை வாசிக்கும் தரும சிகாமணிகளாகும் பரோபகார சீலர்கள் தங்கள் தங்களாற் கூடியபுத்தகங்களை இலவசமாயனுப்பிப் புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம். புத்தக மனுப்புவோர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கனுப்புக.

நோயாளிகள்.

விலாசம்:

TO

THE READING ROOM, & LIBRARY,
c/o The Suprintendant,
Laper asylam Hendala,
Wattala P. O.
CEYLON.

சுவிவேக தருப்பணம்.

ஸ்ரீ சாந்தானந்த சரசுவதி சுவாமிகள் ஆந்திர மொழியில் அருளியது.

(வெண்டாமரை ௩, இதழ் ௮-௧, 186-ம் பக்கத் தொடர்ச்சி.)

4. நீர், பரிசுத்தம் மதுரம் முதலிய குணங்களினாலே மூழ்கல், பருகல்களுக்குப் பாத்திரமாயிருப்பதுபோல, முமுட்சுவானவன் சற்பிரவர்த்தத்தினாலே எப்போதும் சுசியுடையவனாய்ப் பயன்படத் தக்கவனாயிருத்தல் வேண்டும்.

5. நெருப்பு,

(a) எப்போதும் இருளோடு சேராமல் ஒளிமயமா யிருத்தல்போல, முமூட்சுவானவன் எப்போதும் அஞ்ஞானத்தினால் போர்க்கப்படாமல் மெய்ஞ்ஞான விசிட்டனாய் இருத்தல்வேண்டும்.

(b) சமித்துக்கள் முதலியவற்றின் கூட்டுறவினாலே நெருப்பு பிரகாசித்தல்போல, முமூட்சுவானவன் தூய தவத்தினாலே விளங்குதல் வேண்டும்.

(c) அக்கினியானது பிரயத்தனமின்றித் தன்பால் கிடைத்த பொருட்களைத் தங்கவைக்காமல் அப்போதே யுண்ணுதல்போல, முமூட்சுவும் எதிர்கால அபேட்சையின்றி, எப்போது எது கிடைக்குமோ அப்போதே அதை வினியோகித்துக்கொள்ளவேண்டும்.

(d) பிரயத்தனமில்லாமல் கிடைத்த பொருள்களினிடத்து அக்கினியானது சுவை, பக்குவங்களை நினைக்காததுபோல, முமூட்சுவும் தனக்குக் கிடைத்த பொருள்களினிடத்துச் சுவை, பக்குவங்களை நினைத்தல் கூடாது

(e) அரணிக் கட்டையைக் கடைந்து அக்கினியைப் பிரகாசிக்கச் செய்வதுபோல, முமூட்சுவானவன் நிதித்தியாசனமாகிய கடைதலினாலே ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்து பரமான்மாவைத் தரிசித்தல் வேண்டும்.

(f) அக்கினியானது தன்னை உபாசிப்பவர்களுடைய பாவங்களை நீக்காநின்று, தன்னிடத்து ஓமம் செய்யும் அவ்விய கவ்வியங்களையெல்லாம் சுவீகரிப்பதுபோல, முமூட்சுவானவன் தன்னை யாசிரயித்தவர்களுடைய பாவங்களைப் போக்காநின்று அவர்கள் சமர்ப்பித்த பதார்த்தங்களைச் சுவீகரித்தல்வேண்டும்.

(g) தோற்ற வொடுக்கங்கள் அக்கினிச் சுவாலைகட்கே யன்றி, அக்கினிக்கு இல்லாததுபோல, காலானுகுணமாக, பூதங்கட்கு உற்பத்தி நாசங்கள் நியதமா யிருப்பினும், ஆன்மாவிற்குமாத்திரம் எப்போதும் இல்லையென்று கிரகிக்கவேண்டும்.

6. காற்று, மந்த வேகங்கள், சுகந்த துர்க்கந்தங்கள், குளிர்ச்சி வெப்பங்கள் முதலிய குணங்களோடு கூடி வீசுவதேயாயினும், அக் குணங்களெல்லாம் காற்றுக்குக் கூட்டுறவினாலே உண்டானவையே யன்றி இயற்கையாகாததுபோல, உடம்பில் வசிக்கும் ஆன்மாவிற்கு, கரும வசத்தினால் சேரிடும் சுகதுக்கங்கள் முதலிய விகாரங்களெல்லாம் அஞ்ஞான வசத்தால் தோற்றுவதேயன்றி இயற்கையல்லவென்றுதெரிதல்வேண்டும்.

7. **ஆகாயம்,** சர அசர உருவமான எல்லாப் பொருள்களினிடத்தும் நிறைந்துள்ளதாயினும், எதனிடத்தும் அகப்படாமல் விலட்சணமாயிருத்தல்போல, பரமான்மாவானது எல்லாப் பொருள்களினுடைய அகம் புறமெங்கும் நிறைந்துள்ளதாயினும் அவையெல்லாவற்றிற்கும் விலட்சணமாயுள்ளதென்றும், ஆகாயம், தன்னிடத்துத் தோற்றும் மேகங்கள், மின்னல்கள் முதலியவற்றைத் தொடாததுபோலவே, பரமான்மாவும் காலவசத்தினால் தன்னிடத்துத் தோற்றும் உற்பத்தி, திதி, நாசங்களையடையாமல் சச்சிதானந்தமாகப் பிரகாசிக்குமென்றும் கிரகித்தல் வேண்டும்

8. **சூரியன்,** தனது கிரணங்களினாலே நீரை யிழுத்தபோதிலும் தான் உபயோகித்துக்கொள்ளாமல் பின்னரும்கிரணங்களினாலேபூமிக்கு விட்டுவிட்டாற்போல, முமூட்சுவும் செவிமுதலிய பொறிகளினாலே ஓசை முதலிய விடயங்களைக் கிரகித்தாலும், மனத்தினிடத்து நிலைபெறுத்தாமல் அவற்றை அப்போதே நீக்குதல்வேண்டும்.

9. **சந்திரன்,** ஆக்கக் கேடுகள் சந்திர கலைகட்கேயன்றிச் சந்திரனுக்கில்லையாதல்போல, அறுவகை விகாரங்களும்சரீரத்திற்கேயன்றி ஆன்மாவிற்கு இல்லையென்று அறிதல் வேண்டும்.

10. **புறா,** தனதுமனைவிமக்கள்முதலியவற்றினிடத்துள்ளசிநேக பந்தத்தினாலே வலையிலே யகப்பட்டுக்கொண்டுஅழியுமாறுபோல, முமூட்சுவானவன் அம் மனைவி மக்களைக் கடவுள் சந்ததியென்று கிரகிக்காமல் எனது என்னும் பிரவர்த்தத்தினால் கட்டுண்டவனாய் அவர்களுடைய சம்யோக வியோக முதலியவற்றினாலே துன்பக் கடலுள் மூழ்கி ஆயுளை வீணாக்கிப் பிறகு கொடிய பிறவிக் கடலுள் வீழ்ந்து எப்போதும் துன்பத்தையனுபவிப்பானென்று தெரிதல்வேண்டும்.

11. **அசகரம்,** (ஓர்விதப் பாம்பு) பிரயத்தனமின்றித் தனக்குக் கிடைத்த ஆகாரத்தைக்கொண்டு திருத்தியடைவதுபோல, ஞானியானவன் கரும வசத்தினாலே அற்பமாகவோ அதிகமாகவோ கிடைத்த சுவையுள்ள பதார்த்தமானாலும் சுவையில்லாத பதார்த்தமானாலும் உபயோகித்தல் வேண்டும்.

12. **கடல்,** எப்போதும் கம்பீர பிரசன்னதைகள் உண்டாகி, உட்பிரவேசித்தற்கும் கடத்தற்கும் சாத்தியமின்றி, கலக்கத்தையடையாமல் நிச்சலதையடைந்து, மழைக் காலத்தில் பல ஆறுகள் வந்து சேரினும் பெருக்கமுறாமலும், வெய்யிற் காலத்தில் நீர் வற்றிப்போய் ஆறுகள் பாயாவிடினும் குறைந்துபோகாமலும் ஒரேவிதமாயிருத்தல்போல, ஞானியானவன் எப்போதும் புறத்தே பிரசன்னதையும் அகத்தே கம்பீரத்தை

யும் அடைந்து பிறருக்கு உட்படாமலும், பிறரால் துன்பப்படாமலும், ஞான வைராக்கியங்களினாலே மனோ தைரியத்தையடைந்து, கர்ம வசத்தால் சம்பவிக்கும் இலாப நட்டங்களில் மகிழ்ச்சியும் துன்பமுமடையாமல் சமசித்தனா யிருத்தல்வேண்டும்.

(வரும்.)

குருபாதசேகரன்.

சிதம்பரம்

ஸ்ரீ சபாநாயகர் திருவநந்தல் காலைச்சந்தி கட்டளை

மகா வித்துவான்

வேல்லப் பிறந்த – தில்லைநாயகமுதலியார் அவர்கள்

-பிரிவிடையாற்றாப் பேதுறுகலுழ்ச்சி.

இமிழ்கடல் வளைஇய விருநில மதனு
ளமிழ்தென விளங்கி யறிவுரு வாய
தில்லையம் பதியி னெல்லையில் கால
முயிர்களீ டேற வுஞற்று மைந்தொழிற்
செயிரறு நடனத் திருவரு ளாளன்
விழுமிதிற் கொள்ளும் பொழுதறு பூசை
காலைசந் தியெனக் கதித்தவோர் கட்டளை
வேலைமேற் கொண்டு விதிப்படி நடாத்தி
யானருட் கிலக்கிய மாகி நின்ற
வானுந் தூய மனனு மாய
கந்தசா மியெனுங் கருணைக் கடலிடை
யந்தண் வேலையி னுதித்த னெழுந்தாஅங்
குலகமீக் கூற வுதித்தவெம் பெரும!
கலைவளர் மதியிற் கவினுருக் கிளர்ந்து
தில்லைநா யகமெனத் திகழ்பெயர் பெற்றோய்!
எல்லையில் புராண மியல்பி னுணர்ந்தோய்!
ஏனை யிலக்கிய விலக்கண மனைத்தும்
ஊனமின் றுணர்ந்த வுரனுடை யண்ணல்!
இயன்மொழி யன்றி யிசைநா டகமும்
பயின்றவை நுட்பம் பன்முறை தெரித்தலிற்
குயிலுவ ரியவரொடு வயிரியர் தாமும்
இயன்முறை கேட்கு மிசைபே ரான!

தனித் தமிழ் பயின்ற சங்கத் தமிழ்க்கட
னுனித்து மூழ்கிய நண்பே ரறிவோய்!
மன்ன னுணையின் மாண்டமிழ் மொழியினை
என்ன நிலத்து மியக்குதல் வேண்டி
உற்சா கத்தெழும் லெக்ஸிகன் கமிட்டியில்
உயர்ந்தோர் தெரிப்ப வொருதா னாகிப்
பெயர்தனக் கேற்பப் பிறங்கிய வள்ளால்!
உயர்ந்தோ ரியல்புதா முற்ற பொருளைப்
பெறுகவை யமுமெனப் பிறழா தீதல்
எனமனங் கொளீஇ யாவர்தன் னடைந்தார்
மனுமவ ருளம்பட வளம்படு நன்னூல்
நன்றே யீந்த குன்றாச் செல்வ!
குன்றே யனைய குணத்தோய் நீயே
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்
மிசைநிலக் கண்ணும் விளைதப்ப நினைந்தோ
முன்னும் பின்னும் மொய்கொளப் பெற்றுத்
தன்னிரு சிறகருந் தாக்க வெழுமுடற்
பறவை போலும் பாங்கி னாய்தம்
எங்ஙனை மியலு மங்ஙனஞ் சுந்தர
முருகே சருடன் முயங்கி நடுநின்று
பருவஞ் சிறிதிற் பார்புகழ் நிறீஇத்
தனிநிலை யாகித் தயங்கினை யந்தோ
இனியென் செய்குது மினியென் செய்குதும்
யாமே, வைகலும் வைகலும் வந்து வந்து
செவிப்புல மாந்தி மனப்புல மடுப்ப
நவைதீர் காட்சி நற்குறி சில்சில
கைம்மாறு கருதாக் கார்முகி லென்ன
இம்மைப் பயனை யென்றும்வேண் டாது
தனக்கென வொன்று மில்லான் பிறர்க்கே
யுறுதிக் குழந்த வொருமுதல் வன்னென
இதுபொழு தென்னு திரவும் பகலும்
பன்னூற் கேள்விப் பயனொடு மாறு
தன்புட னருளிய வடிகே ளடிகேள்!
போரவை யணிந்து பிரசங் கிக்கு
மோரோ ரமையத் துயர்நிலை வகித்த

ராமநா தனெனு நாமம் புனைந்தே
யுலகினர்க் குதவி யொன்றையே நோக்கும்
பலர்புகழ் செல்வனும் பாண்டித் துரையெனு
முன்னூல் பின்னூன் முழுதுணர் புலவனும்
பன்னுச் சிறப்பிற் பார்வையம் பூண்ட
ஐக்கோர்ட் ஜட்ஜா மைய ரவர்களும்
மிக்கு வியக்கும் விழுமி யோயே!
செந்தமிழ்ச் சங்கந் தில்லையி னிறுவி
யந்தமில் புலவ ரரும்பொரு டெரிப்ப
ஆக்கித் தானு முஞற்றி யறிவுக்கொடை
தேக்கியே பல்லோர் சிந்தை தெளிவித்
தெவரெம் மதத்தா ரவரு முடம்படச்
சிவமதம் புனையுஞ் செஞ்சொல் லோயே!
எப்பே ரவையி னியாவரொரு விரும்பினு
மப்போ தேசொலு மஞ்சாத் தன்மையுங்
கேட்டோர் வியப்பக் கிளக்கு மணியு
மீட்டு மெவ்விடை விரிவுறக் காண்குறும்
அதான்று, தில்லையம் பதிக்க ணல்லையம் பதிவாழ்
காவலர் திலக நன்மையி னமைந்த
பூவலர் கழகம் பொலிந்துமேம் பாடுறச்
செங்கோன்-மன்னன் றிறத்து நடைபெறூஉ
மங்கலில் சோதனை மாணவர் சிறக்கப்
பல்வகைத் தமிழ்நூல் பான்மையி னுணர்த்தி
எல்வழங்கு பொருளி னெண்மையிற் காட்டப்
கோபுர மிழந்த கொடிமதி லெனவும்
நாண்மதி யிழந்த நீள்விசும் பெனவு
மாலுமி யிழந்த மாப்புணை யெனவுங்
கல்வியின் சிறப்புக் கெல்லையி லல்லல்
வைத்தகன் றதனின் வித்தகக் கழகோ

(வரும்.)

ஷெயார் மாணாக்கரு ளொருவராகிய
ஜ. ஏகாம்பர ஐயர்,
ஸ்ரீ சபாநாயகமுதலியார் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
சீகாழி.

வெண் குஷ்டத்திற்கு நிவாரணம்.
அற்புதமான மருந்து.

மேல் பிரயோகத்தினாலேயே ஒருவாரத்திற்குள் வியாதி நிவர்த்தியாகுவது நிச்சயம். உடம்பில் எரிச்சல் முதலியவைகள் உண்டாகமாட்டா. எல்லாத் தேகிகட்கும் ஒத்ததா யிருக்கும். ஒரு புட்டி விலை ரூபா 2. ஒன்று முதல் மூன்று புட்டி வரைக்கும் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

ஆயுர் வேதவைத்திய மருந்துகளின் விவரஜாப்தா வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

P. சுப்பராய்,

ஆயுர் வேத வைத்திய சாலை,

தஞ்சாவூர்.

ஆர்டர் செய்யும்போது இப் பத்திரிகையின் பெயரைக் கண்டு எழுதவும்.

To Let.

தேகாரோக்கியம் தீரண்ட செல்வம் தீர்க்காயுள்	இவைகள்	ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகிப்போருக்கு உண்டாகின்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

எவ்வித காரணத்தாலும் ஏற்படுகிற பலஹீனத்தைப்போக்கி அதி சீக்கிரத்தில் சாசுவதமான குணத்தைக் கொடுக்கும்படி தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

அவைகள் ஆரோக்கியமான பசி தீபனத்தைக் கொடுத்து, தேகத்துக்கும் மனதுக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, கெட்ட ரத்தத்தை சுத்திகரித்து ஞாபக சக்தியைத் தீட்சணியப்படுத்துகிறது.

சரீரத்தில் சளைத்துப்போன நரம்பு ஸ்தானங்களை ஆறுதல் செய்து வலுவான ஜீரணசக்தியைக்கொடுத்து, அவயவங்களுக்குத் தக்க திடத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து, இளமையிலுள்ள அழகை அடையும்படி செய்கிறது.

இந்த மாத்திரைகள் பொதுவாக அங்கங்கள்தோறும் சக்தியைக் கொடுக்கும் சிறந்த பலவிருத்தி மருந்து. இவைகளின் குணத்துக்கு இதர மருந்துகள் இணையாகாது. இன்னும் சரீர சத்ருக்கள் அணுகாவண்ணம் வைரக் கோட்டையைப்போல் செய்து காப்பாற்றுகின்றன.

ஒரு டப்பியை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். அவைகள் "பகற் போஜனத்துக்குப் பிறகு தங்கம்போலும், இராப் போஜனானந்தரம் ரத்னம்" போலுமுள்ளது.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1. இன்னும் எங்கள் மருந்தின் மகத்துவத்தை அறிய விரும்புவோர் எங்கள் புதிய காட்லாக்குக்கு எழுதுங்கள். இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே 96, மவுண்ட் ரோட், மதராஸ்.